**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.341/2020**

**வா.சா.1 – முனியப்பன்**

**நாள். 19.06.2023**

**<u>1 முதல் 11 மற்றும் 13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்த 14,15 ம் பிரதிவாதிகள் பெயரில் சொத்து சம்பந்தமாக பட்டா மற்றும் வருவாய் ஆவணங்கள் ஏதும் இல்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சமயத்தில் அந்த இடத்தில் 22 நபர்கள் வீடு கட்டி, மின் இணைப்பு பெற்று நீண்ட காலமாக அனுபவித்து வருகின்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 கிரைய பத்திரத்தில் மேற்படி நபர்கள் குடியிருந்து வருகிறார்கள் என்ற விபரம் எழுதப்படவில்லை என்றால் சரிதான். 1 முதல் 11 மற்றும் 13 பிரதிவாதிகள் தாவா சொத்தில் வீடு கட்டி 26 வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் , எத்தனை ஆண்டுகளாக குடியிருந்து வருகிறார்கள் என்று தெரியாது. ஆனால் குடியிருந்து வருகிறார்கள். முத்துச்சாமிக்கவுண்டருக்கு ராமசாமி, சேட்டு என்ற பழனிச்சாமி, சுப்பையன் ஆகியோர்கள் தான் வாரிசுகள் என்றால் சரிதான். 1 முதல் 11 மற்றும் 13 பிரதிவாதிகள் முத்துச்சாமி மற்றும் அவரது வாரிசுதாரர்களிடம் சொத்துக்களை கிரையம் வாங்கி 26 வருடங்களுக்கு மேலாக வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால், கிரையம் வாங்கவில்லை. 1 ம் பிரதிவாதி 10.07.1993 ம் தேதி சர்வே எண்.173/6 ல் 4 1/2 செண்ட் கிரையம் வாங்கி அதில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் கிரையம் வாங்கவில்லை. 2 ம் பிரதிவாதியின் விற்பனையாளர் திருமலைச்சாமி என்பவர் கடந்த 09.12.1993 ம் தேதியில் மேற்படி சர்வே எண்ணில் 4 1/2 செண்ட் கிரையம் வாங்கி அதனை 2 ம் பிரதிவாதிக்கு 07.08.1995 ம் தேதியில் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் இல்லை. அவ்வாறு 2 ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்தில் 1995 ம் ஆண்டிலிருந்து ஆஸ்பெஸ்டாஸ் சீட் போட்ட வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் கிரையம் வாங்கவில்லை. ஆனால் வீடு கட்டி குடியிருந்து வருகிறார். 3 ம் பிரதிவாதி 14.11.1994 ம் தேதியில் மேற்படி சர்வே எண்ணில் 2 1/2 செண்ட் கிரையம் வாங்கி அதில் ஓட்டுவீடு கட்டி தற்போது வரை குடியிருந்து வருகிறார் என்றால், கிரையம் வாங்கவில்லை. ஆனால் குடியிருந்து வருகிறார். 4 ம் பிரதிவாதி 02.01.1986 ம் தேதியில் சர்வே எண்.173/5 ஏ – ல் 4 1/2 செண்ட் கிரையம் வாங்கி அதில் சிமிண்ட் ஆஸ்பெஸ்டாஸ் கூரை போட்ட வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால், கிரையம் வாங்கவில்லை. ஆனால் குடியிருந்து வருகிறார். அதில் மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். 5 ம் பிரதிவாதியின் கணவர் 30.05.1988 ல் சர்வே

எண்.173/5 ஏ – ல் 2 1/2 செண்ட் கிரையம் வாங்கி அதில் ஓட்டு வீடு கட்டி 1988 லிருந்து குடியிருந்து, வீட்டு வரி செலுத்தி, மின் இணைப்பு பெற்று வருகிறார் என்றால் கிரையம் வாங்கவில்லை. ஆனால் குடியிருந்து வருகிறார். 6ம் பிரதிவாதி 28.03.1988ம் தேதியில் சர்வே எண்.173/5 ஏ 1 –ல் 7 1/2 செண்ட் நிலம் வாங்கி ஓட்டு வீடு கட்டி, மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு பெற்று வரி கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் கிரையம் வாங்கவில்லை. ஆனால் குடியிருந்து வருகிறார். 7ம் பிரதிவாதி 11.01.1995ம் தேதியில் சர்வே எண்.173/6–ல் 2 1/2 செண்ட் கிரையம் வாங்கி அதில் ஆஸ்பெஸ்டாஸ் வீடு கட்டி மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு பெற்று, வரி விதிப்பு எண் ஏற்பட்டு குடியிருந்து வருகிறார் என்றால் கிரையம் வாங்கவில்லை. ஆனால் குடியிருந்து வருகிறார். 8ம் பிரதிவாதி 09.02.1995ம் தேதியில் சர்வே எண்.173/6–ல் 2 1/2 செண்ட் கிரையம் வாங்கி அதில் ஆஸ்பெஸ்டாஸ் வீடு கட்டி மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு பெற்று, வரி விதிப்பு எண் ஏற்பட்டு குடியிருந்து வருகிறார் என்றால் கிரையம் வாங்கவில்லை. ஆனால் குடியிருந்து வருகிறார். 9ம் பிரதிவாதி 09.12.1993ம் தேதி சர்வே எண்.173/6–ல் 7 1/2 செண்ட் கிரையம் வாங்கி, அதில் ஆஸ்பெஸ்டாஸ் வீடு கட்டி மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு பெற்று, வரி விதிப்பு எண் ஏற்பட்டு குடியிருந்து வருகிறார் என்றால் கிரையம் வாங்கவில்லை. ஆனால் குடியிருந்து வருகிறார். 10ம் பிரதிவாதி 02.05.1986ம் தேதியில் சர்வே எண்.173/5 ஏ 1–ல் 2 செண்ட் கிரையம் வாங்கி அதில் வீடு கட்டி குடும்பத்துடன் இருந்து வருகிறார் என்றால் கிரையம் வாங்கவில்லை. ஆனால் குடியிருந்து வருகிறார். 11ம் பிரதிவாதி 02.05.1986ம் தேதியில் சர்வே எண்.173/6–ல் 4 1/2 செண்ட் கிரையம் வாங்கி வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால், கிரையம் வாங்கவில்லை. ஆனால் குடியிருந்து வருகிறார். 1 முதல் 3 பிரதிவாதிகள் சர்வே எண்.173/6–ல் மொத்தம் 11 1/2 செண்ட் கிரையம் வாங்கி வீடு கட்டி சட்ட வரம்பு காலத்திற்கு மேலாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் கிரையம் வாங்கவில்லை. ஆனால் குடியிருந்து வருகிறார்கள். 4 முதல் 11 பிரதிவாதிகள் சர்வே எண்.173/5 ஏ–ல் மொத்தம் 33 1/2 செண்ட் கிரையம் வாங்கி குடியிருந்து வருகிறார்கள் என்றால் கிரையம் வாங்கவில்லை. ஆனால் குடியிருந்து வருகிறார்கள். நான் கிரையம் வாங்குவதற்கு முன்னதாகவே, மேற்படி பிரதிவாதிகள் பெயரில் குடிநீர் இணைப்பு, மின் இணைப்பு மற்றும் வருவாய் ஆவணங்கள் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியும். நான் கிரையம் வாங்கும் போது, இந்த விபரங்களை கிரையப்பத்திரத்தில் ஏன் குறிப்பிடவில்லை என்று எனக்கு விற்ற நபர்களிடம் கேட்டேனா என்றால், கேட்கவில்லை. நான் கிரையம் வாங்கிய சொத்தில் வில்லங்கம் இருந்தால், விற்றவரே தீர்த்து கொடுப்பதாக பத்திரத்தில் எழுதப்பட்டுள்ள நிலையில், தாவா சொத்தில் உள்ள வில்லங்கத்தை தீர்த்துக்கொடுக்கும்படி, எனக்கு விற்ற நபரிடம் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. வா.சா.ஆ.11 – கிரைய பத்திரத்தில் கிரைய தேதியில் தாவா சொத்தின் அனுபவத்தை என்னிடம் ஒப்படைத்துவிட்டதாக

குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரிதான். எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் நபரிடமே, 26 ஆண்டுகளுக்கு மேலாக சுவாதீனம் இல்லை என்றும், அதனால் அவ்வாறு அவர்கள் சுவாதீனத்தில் இருப்பதாக கண்டு வா.சா.ஆ.11 கிரையப்பத்திரத்தில் உண்மைக்கு புறம்பாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்த 14,15ம் பிரதிவாதிகள் எனக்கு மிகவும் வேண்டப்பட்ட நபர்கள் என்றால் சரியல்ல. 1 முதல் 11 மற்றும் 13 பிரதிவாதிகளை தாவா சொத்திலிருந்து எப்படியாவது அப்புறப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் வா.சா.ஆ.11 ஐ போலியாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் வா.சா.ஆ.11ல் சரியான சொத்து விபரங்கள் சொல்லப்படவில்லை என்றும், யார் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்ற விபரமும் சொல்லப்படவில்லை என்றும் சொல்வது சரியல்ல. 1 முதல் 11 பிரதிவாதிகள் திண்டுக்கல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.289/2014 என்ற வழக்கை 12 மற்றும் 15 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்து தாவா சொத்துக்கள் அனுபவம் மூலம் 1 முதல் 11 பிரதிவாதிகளுக்கு (அந்த வழக்கு வாதிகள்) பாத்தியப்பட்டுள்ளது என்றும், 12 மற்றும் 15 பிரதிவாதிகள் ஆவணங்கள் ஏதும் ஏற்படுத்தக்கூடாது என்று பரிகாரம் கேட்டு, தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் அந்த வழக்கு சம்பந்தமான விபரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கின் தீர்ப்புரையை இந்த வழக்கில் வா.சா.ஆ.9 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் 12 மற்றும் 13 பிரதிவாதிகள் எனக்கு தற்போது ஆஜரான அதே வழக்கறிஞர் மூலமாக அந்த வழக்கில் ஆஜராகியுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 12 மற்றும் 13 பிரதிவாதிகள் அசல் வழக்கு எண்.289/2014 வழக்கில் 1 முதல் 11 பிரதிவாதிகள் சட்ட காலத்திற்கு மேலாக தாவா சொத்தில் குடியிருந்து வருவதாக ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் எனக்கு கிரையம் செய்து கொடுத்த நபர்களுக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்த இந்த வழக்கின் 15ம் பிரதிவாதி அசல் வழக்கு எண்.289/2014 வழக்கில் சாட்சியத்தில் 1 முதல் 11 பிரதிவாதிகள் சட்ட வரைமுறை காலத்திற்கு மேலாக தாவா சொத்தில் குடியிருந்து அனுபவித்து வருகிறார்கள் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.289/2014 வழக்கில் தீர்ப்புரையில் தாவா சொத்து 1 முதல் 11 பிரதிவாதிகளுக்கு அனுபவம் மூலமாக பாத்தியப்பட்டு உள்ளது என்று தீர்ப்புரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 14 மற்றும் 15 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் இருந்த உரிமை நசிந்து விட்டது என்று மேற்படி தீர்ப்புரையில் வா.சா.ஆ.9 ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில்

அனுபவம் பாத்தியப்பட்டதன் அடிப்படையில் உரிமை கொடுத்து தீர்ப்பு வழங்க முடியாது என்றும், ஆனால் Defence ஆக தான் எடுக்க முடியும் என்ற ஒரே காரணத்திற்காக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.289/2014– வழக்கின் தீர்ப்பாணையை எதிர்த்து, திண்டுக்கல் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண். 36/2022 என்ற மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த மேல்முறையீட்டிலும் எனக்கு ஆஜரான வழக்கறிஞர் தான், அதில் எதிர்மனுதாரர்களுக்கு ஆஜராகி வழக்கு நடத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முத்துச்சாமி கவுண்டர் உயிரோடு இருந்த போதே, 1 முதல் 11 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்து, சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைத்துவிட்டதால், முத்துசசாமி கவுண்டருக்கோ, அவரது வாரிசுகளுக்கோ கடந்த 26 ஆண்டுகளுக்கு மேலாக உரிமையோ, எந்த அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு இருக்கையில் 30.09.2013ம் தேதியில் 12 முதல் 15 பிரதிவாதிகளுக்கிடையே ஒரு பாகப்பத்திரம் ஏற்படுத்திக்கொண்டது, உண்மையான பாகப்பிரிவினை கிடையாது என்றும், வீண் விவகாரம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றும் சொல்வது சரியல்ல. வா.சா.ஆ.8 பாகப்பத்திரத்திலும் 1 முதல் 11 பிரதிவாதிகள் தாவா சொத்தில் குடியிருந்து வரும் விபரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் சர்வே எண்.173/6ல் கண்ட 44 செண்டிலும், சர்வே எண்.173/5ஏ1ல் கண்ட 34 செண்டிலும் 14 மற்றும் 15 பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. 14 மற்றும் 15ம் பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் தான், அவர்கள் பெயரில் எந்த பட்டாவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 16.12.2019ம் தேதியில் 14 மற்றும் 15 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தில் வழக்கு சம்பந்தமான விபரங்கள் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 முதல் 11 பிரதிவாதிகள் 14 மற்றும் 15 பிரதிவாதிகளிடம் தாவா சொத்தை என்றைக்கு கிரையம் கேட்டார்கள் என்ற விபரத்தை என்னால் சொல்ல முடியாது. 1 முதல் 11 பிரதிவாதிகள் எந்த காலத்திலும் 14 மற்றும் 15 பிரதிவாதிகளிடம் கிரையம் கேட்கவில்லை என்று சொல்வது சரியல்ல. பிராதில் 12.12.2005ம் தேதியில் புயல் ஏற்பட்டதாகவும், அந்த காலத்தில் குடியிருக்க இடமில்லாமல் 1 முதல் 11 பிரதிவாதிகள் தற்காலிகமாக குடியிருக்க முத்துச்சாமியிடம் அனுமதி கேட்டதாக கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. 12.12.2005ம் தேதியில் எந்த புயலும் வரவில்லை என்றும், அவ்வாறு அனுமதி கேட்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 1 முதல் 11 பிரதிவாதிகள் தங்களது சொந்த செலவில் தாவா சொத்துக்களை கிரையம் வாங்கி வீடுகள் கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிராதில் 1 முதல் 11 பிரதிவாதிகள் தாவா சொத்தை காலி செய்து, ஒப்படைத்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன், ஆனால் எந்த தேதியில் அவ்வாறு

செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. அவ்வாறு 1 முதல் 11 பிரதிவாதிகள் தாங்கள் கிரையம் வாங்கிய சொத்தினை 14,15 பிரதிவாதிகளிடம் எந்த காலத்திலும் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. 14 மற்றும் 15 பிரதிவாதிகள் இந்த நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொன்னால் தான் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.11 கிரைய பத்திரத்தில் 1 முதல் 11 பிரதிவாதிகள் குடியிருப்பது சம்பந்தமான விபரங்களை குறிப்பிடவில்லை என்பதால், நான் கோரியுள்ள விளம்புகை மற்றும் சுவாதீனப்பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 14ம் பிரதிவாதி 20.05.1995ம் தேதியில் முத்துலட்சுமி என்பவருக்கு சர்வே எண்.173/5ல் 47 செண்டில் வடகிழக்கு மூலையில் 2 1/2 செண்ட் நிலம் பதிவு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 24.04.2008ம் தேதியில் 14ம் பிரதிவாதி மற்றும் பழனிச்சாமி ஆகியோர்கள் லட்சுமி என்பவருக்கு சர்வே எண்.173/5–ல் கீழ்புறம் 2 செண்ட் பதிவு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 14ம் பிரதிவாதி, பழனிச்சாமி, சுப்பன் ஆகியோர்கள் மூர்த்தி என்பவருக்கு பதிவு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 14 மற்றும் 15 பிரதிவாதிகள் 1.12.2009ம் தேதியில் சர்வே எண்.173/5–ல் 47 செண்டில் வடபுறம் 4 செண்ட் முத்தம்மாளுக்கு பதிவு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 27.11.2013ம் தேதியில் 14 மற்றும் 15 பிரதிவாதிகள் கிருஷ்ணசாமி மனைவி சரஸ்வதிக்கு சர்வே எண்.173/6–ல் 3 செண்ட் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 14ம் பிரதிவாதி, பழனிச்சாமி மற்றும் சுப்பன் ஆகியோர்கள் சேர்ந்து 12.12.2018ம் தேதியில் சர்வே எண்.173/5–ல் தென்புறம் 1173 சதுரடி தர்மராஜ் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 14ம் பிரதிவாதியின் மாமனார் முத்துச்சாமி கவுண்டர் பெயரில் பட்டா எண்.778ல் சர்வே எண்.173/6 ஏ–ல் 44 செண்ட் மட்டுமே பதிவாகி உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 12 மற்றும் 15பிரதிவாதிகள் எனக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில், மேற்படி சரஸ்வதிக்கு விற்ற சொத்தையும் சேர்த்து எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்.173/5–ல் உள்ள 5 கிரைய பத்திரங்கள் படி, 21.69 செண்ட் நிலத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றும், மீதி 11 செண்ட் மட்டுமே உள்ள நிலையில், 21 செண்ட் அதிகமாக சேர்த்து எனக்கு போலியான ஆவணம் மூலம் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பெருமாள்சாமி, முத்துலட்சுமி, முத்தம்மாள், சரஸ்வதி, லட்சுமணன், மூர்த்தி ஆகியோர்களை ஒரு தரப்பினர்களாக நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நபர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால், வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தங்களுடைய எதிர் வழக்குரையில் 1 முதல் 11 பிரதிவாதிகள் கூறியுள்ளனர் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால்

தெரியாது. 1 முதல் 11 பிரதிவாதிகள் பக்கா கட்டிடம் கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் பிராதில் அவர்கள் குடிசைகள் போட்டு தங்கியுள்ளதாக உண்மைக்கு புறம்பாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிராதில் 1 முதல் 11 பிரதிவாதிகள் யாரிடம் அனுமதி கேட்டார்கள் என்று என் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. உண்மைக்கு புறம்பாக 1 முதல் 11 பிரதிவாதிகள் அனுமதியின் பெயரில் தாவா சொத்தில் குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 ஆவணம் ஒரு மலரணையான ஆவணம் என்றும், அதை எழுதிக்கொடுத்தவர்களுக்கே எந்த உரிமையும் இல்லை என்றும் சொல்வது சரியல்ல. 1 முதல் 11 பிரதிவாதிகள் தங்களுக்கு சம்பந்தமான 57 ஆவணங்களையும் அசல் வழக்கு எண்.289/2014 வழக்கில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த விபரம் வா.சா.ஆ.9 தீர்ப்புரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.11 ஆவணம் உண்மையான ஆவணம் கிடையாது என்றும், நான் கோரியுள்ள விளம்புகை மற்றும் சுவாதீனப்பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் 1 முதல் 11 பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.06.19 17:22:06 +0530

Additional District Judge,

Dindigul.